# 2007 பல்வகைக் குடிவருநர் விசாத் திட்டத்திற்கான (DV-2007) அறிவுறுத்தல்கள்

காங்கிரசின் பணிப்பாணைக்கமைவான பல்வகைக் குடிவருநர் விசாத்திட்டம் ஓர், ஆண்டு அடிப்படையில் வெளிவிவகாரத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டதாக, குடிவரவு மற்றும் தேசியச் சட்டத்தின் (INA) 203 ( C ) பிரிவின் நிபந்தனைகளுக்கமையச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1990ன் குடிவரவுச்சட்டத்தின் ( Pub.L.101-649) 131,“ பல்வகைக் குடிவருநர்கள்” என்ற ஒரு புதிய வகுப்பினரின் (DV குடிவருநர்கள்) வருகைக்கு வகைசெய்யும் விதத்தில், INA 203 ஐத் திருத்தியது. குறைந்த விகிதங்களில் அமெரிக்காவுக்குக் குடிபெயரும் நாடுகளிலிருந்து ஆண்டுதோறும் 50,000 நிரந்தர வதிவு விசாக்கள் கிடைப்பதற்கு இச்சட்டம் வகைசெய்கிறது.

இந்த வருடாந்த DV திட்டம், சாதாரண, ஆனால் கடுமையான தகுதித்தேவைகளைத் நிறைவேற்றும் ஆட்களுக்கு நிரந்தர வதிவு விசா கிடைப்பதற்கு வகை செய்கிறது. பல்வகை விசாவுக்கான மனுதாரர்கள், ஒரு கணினியினால் லொத்தர் முறை மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர். எனினும் இந்த விசாக்கள் குறைந்த வீதங்களில் குடிவருவோருக்கே அதிக எண்ணிக்கையில் கிடைக்கும் விதத்தில் ஆறு பூகோளப் பிராந்தியங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றன. மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் ஐ.அ வுக்கு 50,000 க்கு மேற்பட்ட குடிவருநர்களை அனுப்பியுள்ள நாடுகளின் பிரஜைகளுக்கு விசா எதுவும் கொடுபடமாட்டாது. ஒவ்வொரு பிராந்தியத்திற்குள்ளும் எந்த ஒரு ஆண்டிலும் கிடைக்கவுள்ள பல்வகை விசாக்களில் ஏழு சத வீதத்திற்குத் கூடுதலானவற்றை எந்த ஒரு நாடும் பெறமுடியாது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 50,000 க்குக் கூடுதலான குடிவருநர்களை ஐ.அ வுக்குத் அனுப்பியதன் காரணமாகப் பின்வரும் நாடுகளைச் சேர்ந்த சுதேசி[1]கள் DV 2007 திட்டத்தின் கீழ் மனுச் செய்வதற்குத் தகுதியற்றோராகின்றனர்.

> **கனடா, சீனா (கண்டத்தில் பிறந்தோர்), கொலம்பியா, டொமினிக்கன் குடியரசு, எல்சல்வடோர், ஹெய்ற்றி, இந்தியா, ஜமய்க்கா, மெக்ஸிக்கோ, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், ரஷ்யா, தென்கொரியா, ஐக்கியராஜ்யம் (வடஅயர்லாந்து நீங்கலாக), மற்றும் அதில் தங்கியுள்ள பிரதேசங்கள், வியட்நாம் என்பன. ஹொங்கொங் SAR, மக்கவ் SAR மற்றும் தாய்வான் என்பனவற்றில் பிறந்தோர் அருகதையுடையோராவர்.**

**DV-2007 பல்வகை விசா லொத்தருக்கான விண்ணப்பங்கள் (மின்னஞ்சல் மூலம்) 2005 ஒக்டோபர் 5, புதன்கிழமைக்கும், 2005 டிசம்பர் 4 ஞாயிற்றுக்கிழமைக்குமிடையே, மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்படவேண்டும். விண்ணப்பகாரர்கள் மின்னனுப் பல்வகை விசா பிரவேசப் படிவத்தை நவம்பர் 5 நண்பகல் முதல் தொடங்கும் பதிவுக் காலத்தின்போது 'WWW.DVLOTTERY.STATE.GOV' என்ற இணையத்தள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். காகித விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் அனுப்புவதற்கு, பதிவுக்காலக் கடைசி வாரம்வரை காத்திருக்க வேண்டாமென விண்ணப்பகாரர்கள் வலுவாக உற்சாகப் படுத்தப்படுகின்றனர். கடுமையான தேவை காலதாமதத்தில் முடிவுறலாம். 2005 டிசம்பர் 4 நண்பகலுக்குப் பின்னர், விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

## விண்ணப்பத்திற்கான தேவைகள்

- **விண்ணப்பகாரர் 11ம் பக்கம் முதல் நிரைப்படுத்தப்பட்டுள்ள நாடுகள் ஒன்றில் பிறந்தவராக இருத்தல்வேண்டும்.**

எந்தெந்த நாடுகளில் பிறந்தவர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையோர் என்பதை நிர்ணயம் செய்வதற்குப் பிரதேச வாரியாக இடம்பெற்றுள்ள நாடுகள் நிரலைப் பார்க்க. தகுதிபெற

[1] இந்த அறிவித்தலில் இடம்பெறும் “Country” நாடு என்ற பதம், 11ம் பக்கமுதல் நிரல்படுத்தப்பட்டிருக்கும் நாடுகள் பொருளாதாரங்கள் மற்றும் நியாயங்கள் என்பனவற்றை உள்ளடக்கும்.

அருகதையுடைய சுதேசிகளைக்கொண்ட ஒரு நாட்டின் சுதேசி என்பது, அநேக சந்தர்ப்பங்களில், விண்ணப்பகாரர் பிறந்த நாடாகவே பொருள்படும்; எனினும், ஓர் ஆள் தகுதி பெறுவதற்கு இரு வழிகள் உண்டு. முதலாவது சுதேசிகள் தகுதியற்றவர்களாக உள்ள ஒரு நாட்டில் ஓர் ஆள் பிறந்திருப்பின், அவரின்/ அவளின் வாழ்க்கைத்துணை, தகுதி பெறும் சுதேசிகளைக்கொண்ட ஒரு நாட்டில் பிறந்திருப்பின், அத்தகைய ஆள், தனது வாழ்க்கைத் துணையின் நாட்டிற்கு உரிமை கோரலாம் ; ஆனால், விண்ணப்பகாரருக்கும் அவரின் வாழ்க்கைத்துணைக்கும் விசா வழங்கப்பட்டு அவர்கள் இருவரும் ஒரே சமயத்தில் ஐ.அ வுக்குள் பிரதேசிப்பதாயின் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அமைந்திருக்கும். இரண்டாவது , ஓர் ஆள் சுதேசிகள் தகுதியற்றவர்களாக உள்ள ஒரு நாட்டில் பிறந்திருப்பின், அவரின்/ அவளின் பெற்றோர்கள் அங்கு பிறந்து அல்லது அவரின் / அவளின் பிறப்பு நிகழ்ந்த சமயம் அங்கு வசித்திருப்பின் அத்தகைய ஆள், பெற்றோர்கள் பிறந்த நாடொன்றினைச் சொந்தங் கொண்டாடலாம். ஆனால் அந்த நாடு DV 2007 நிகழ்ச்சித்திட்டத்திற்கு அதன் சுதேசிகள் தகுதி பெற்றிருப்பின் என்ற அடிப்படையில்.

- **விண்ணப்பகாரர் DV நிகழ்ச்சித்திட்டத்தின் கல்வி அல்லது பயிற்சித் தேவைவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.**

  **கல்வி அல்லது பயிற்சி:** ஒரு விண்ணப்பகாரர் ஓர் உயர் பாடசாலைக்கல்வி அல்லது அதற்குச் சமமானதை ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியை உள்ளடக்கிய ஒரு 12 ஆண்டுப் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தவராக (கட்டாய பாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் க.பொ.த சா/த பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்) அல்லது ஒரு தொழிலில் குறைந்தது 2 ஆண்டு காலப் பயிற்சி அல்லது அதனைச் செய்வதற்கான அனுபவம் என்ற வகையில் கடந்த ஐந்து ஆண்டு காலப் பகுதிக்குள் 2 ஆண்டுகால தொழில் அனுபவம் உடையவராயிருத்தல் வேண்டும். தகுதிபெறும் தொழில் அனுபவத்தை நிர்ணயிப்பதற்கு ஐ.அ தொழில் திணைக்களத்தின் 0* Net on Line தரவுத் தளம் பயன்படுத்தப்படும்

- **விண்ணப்பகாரர், இந்தத் தேவைகளைப்பூர்த்தி செய்ய முடியாதிருப்பின், அவர் அல்லது அவள் DV நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கக் கூடாது.**

## DV-2007க்கு ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை முறைகள்

- **வெளிவிவகாரத்திணைக்களம் 2005 ஒக்டோபர் 5ம் திகதி EST நண்பகல் 12 மணி (GMT-5) தொடக்கம் 2005 டிசம்பர் 4 EST நண்பகல் 12.00 மணிக்கு(GMT-5) முடிவுறும். பதிவுக் காலப்பகுதியின்போது மட்டுமே மின்னஞ்சல் மூலம்**'www.dvlottery.state.gov' **இணையத்தள முகவரிக்கு அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களை மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.**

- விண்ணப்பப்படிவத்தை யார் சமர்ப்பித்தாலும் ஒரு விண்ணப்பகாரருக்காக **ஒன்றுக்கு** மேற்பட்ட எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறின், அத்தகையோரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பகாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை சொந்த முறையில் தயாரித்துச் சமர்ப்பிக்கலாம் அல்லது அவர்களுக்காக வேறொருவரைக் கொண்டும் சமர்ப்பிக்கலாம்.

- வெற்றிகரமாகப் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள், கணினித் திரையில் விண்ணப்பகாரரின் பெயர், பிறந்த திகதி, பொறுப்புடைத்த நாடு, மற்றும் திகதி/ நேரம் காட்டும் ஒரு முத்திரை அடையாளம் என்பனவற்றை உறுதிசெய்யும் விதத்தில் வெளிக்காட்டுவதில் முடியும். விண்ணப்பகாரர் தங்களின் வலை மேலோடியின் பதிவுச்செயற்பாட்டினைப் பயன்படுத்தி, இந்த உறுதிப்பாட்டினை, அவரின் /அவளின் பதிவேட்டுக்காகப் பதிந்து கொள்ள முடியும்.

- காகித விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

- தேவைப்படும் சகல நிழற்படங்களும் சமர்ப்பிக்கப்படாதவிடத்து, விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பகாரர் மற்றும் அவரின்/அவளின் வாழ்க்கைத்துணை மற்றும் தமக்குப்பிறந்தவையும் சட்டபூர்வமாக தத்தெடுத்தவையும் மற்றும் வேறு தாரத்தின் மூலம் பிறந்தவையுமான ஒவ்வொரு 21 வயதுக்குட்பட்ட பிள்ளையினதும் நிழற்படங்கள் ( ஏற்கனவே ஓர் ஐ.அ பிரஜையாகவுள்ள அல்லது சட்டபூர்வமாக நிரந்தரமாய் வதியும் ஒருவர் தவிர்ந்த) விண்ணப்பகாரருடன் தொடர்ந்தும் வாழ்ந்திராத அல்லது DV திட்டத்தின் கீழ்க் குடிபெயர எண்ணங்கொண்டிராத ஒரு பிள்ளையாகயிருப்பினும் சரியே, அத்தகைய அனைவோரினதும் சமீபத்தில் எடுக்கப்பட்ட நிழற் படங்கள் எலக்ற்றோனிக் முறை மூலம் பல்வகை விசா விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்பட்டிருத்தல் வேண்டும். குழுவாக அல்லது குடும்பமாகச்சேர்ந்து எடுத்த நிழற்படங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் வெவ்வேறானதான நிழற்படங்கள் இருக்க வேண்டும்.

  ஒவ்வொரு விண்ணப்பகாரரினதும் அவரின்/அவளின் வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைகளினதும் இலக்க முறையில் நிழற்படம் (படிமம்) அந்த EDV விண்ணப்பப்படிவத்துடன் தொடராமுறை நிலையினதாக அனுப்பப்படல் வேண்டும். படிவக்கோப்பினைப் புதிதாக ஓர் இலக்க முறை நிழற்படம் எடுத்துக் கொள்வதன் மூலம் அல்லது ஒரு நிழற்படப்பிரதியை ஓர் இலக்கமுறை வருடியைப்பயன்படுத்தி வருடுதல் மூலம் தயாரித்துக்கொள்ள முடியும்.

## <u>ஓர் இலக்கமுறை நிழற்படத்தைச் (படிமம்) சமர்ப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள்</u>

படிமக்கோப்பினைப், பின்வரும் அமைப்பு நியதிகளுக்கும், தொழில்நுட்ப நியதிகளுக்கும் ஏற்புடையதாக அமையும்விதத்தில், பின்வரும் வழிகள் ஒன்றின் மூலம் தயாரிக்க முடியும்.

- ஒரு புதிய, இலக்கமுறைப்படிவத்தை எடுப்பது
- சமர்ப்பிக்கப்பட்ட ஒரு நிழற்படத்தை வருடுவதற்கு, ஓர், இலக்க முறை வருடியைப்பயன்படுத்துவது.

**<u>படிம அமைப்புக்கான விவரக் குறிப்புகள்:</u>** சமர்ப்பிக்கப்படும் இலக்கமுறைப்படிமம், பின்வரும் அமைவு விவரக் குறிப்புகளுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும். அன்றேல் அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

- **தலையின் அமைவு நிலை**
  - ▫ நிழற்படம் பிடிக்கப்படுபவர், படமெடுக்கும் கருவியை நேரடியாக எதிர்நோக்கியிருக்க வேண்டும்.
  - ▫ அந்த ஆளின் தலை, உயர்த்தப்பட்டோ, தாழ்த்தப்பட்டோ, அல்லது பக்கவாட்டில் சரிந்திருக்கவோ கூடாது.
  - ▫ அந்த ஆளின் தலை, நிழற்படத்தின் சுமார் 50% இடப்பரப்பை உள்ளடக்கியதாக அமைந்திருக்க வேண்டும்.

- **பின்னணி**
  - ▫ நிழற்படம் பிடிக்கப்படுபவர் நடுநிலையான மென்வர்ணப் பின்னணி ஒன்றுக்கு முன்னால் அமர்ந்திருக்க வேண்டும்.
  - ▫ கடும்வண்ணம் அல்லது அலங்காரப் பின்னணிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

- **குவிவு**
  - ▫ நிழற்படம் நுண்ணிய குவிவினைக்கொண்டதாக அமைந்திருக்க வேண்டும்.

- **அலங்காரப்பொருட்கள்**
  - ▫ படம்பிடிக்கப்படும் அந்த ஆள் தோன்றும் நிழற்படத்தில், அவர் கண்ணாடி அல்லது முகத்திலிருந்து கவனத்தை வேறு திசையில் திருப்பக் கூடியதான எதனையும் அணிந்திருப்பின், அப்படங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

- **தலைப்போர்வைகள் மற்றும் தொப்பிகள்**
  - ◻ மத நம்பிக்கைகளுக்கான தலைப்போர்வைகள் அல்லது தொப்பிகளை அணிந்திருக்கும் விண்ணப்ப காரர்களின் நிழற்படங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறிருப்பினுங்கூட, விண்ணப்பதாரரின் முகத்தின் எந்த ஒரு பகுதியையேனும் அது மறைந்திருக்கலாகாது.
  - ◻ திட்டவட்டமாகவே, மத அனுஷ்டானத்தன்மையைக் கொண்டிராத, குலம் சார்ந்த அல்லது வேறுவித தலைப்போர்வைகளை அணிந்திருக்கும் விண்ணப்பகாரர்களின் நிழற்படங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
  - ◻ இராணுவ, விமான நிறுவனம் சார்ந்த அல்லது மற்றையவித தொப்பிகள் அணிந்து பிடிக்கப்பட்ட நிழற்படங்களும் செல்லுபடியாகா.

**தொழில்நுட்ப நியமக் குறிப்பீடுகள்:** சமர்ப்பிக்கப்பட்ட இலக்கமுறை நிழற்படம், பின்வரும் நியமக் குறிப்பீடுகளுக்கு அமைவாக இருத்தல் வேணடும்.அல்லது அம்முறைமை அமைவு, EDV விண்ணப்பப் படிவத்தைத் தன்னியக்க ரீதியில் நிராகரித்து, அதனை அனுப்பியவருக்கு அறிவித்துவிடும்.

- **ஒரு புதிய இலக்கமுறைப்படிமத்தை எடுத்தல்:** இலக்கமுறையில் புதிதாக ஒரு படிமம் எடுப்பதாயின் அது பின்வரும் நியமக் குறிப்பீடுகளுக்கு ஏற்புடையதாக அமைந்திருத்தல் வேண்டும்.
  - ◻ படிமக்கோப்பு வடிவமைப்பு: அப்படிமம், கூட்டு நிழற்பட நிபுணர்கள் குழுவின் (JPEG) நியமக் குறிப்பீடுகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.
  - ◻ படிமக்கோப்பின் அளவு: படிமக்கோப்பின் அளவு மிகக் கூடுதலானதாக, அறுபத்தியீராயிரத்து ஐந்நூறு (62,500) பைற்களைக் கொண்டிருக்கும்.
  - ◻ படிமத்தின் பிரிதிறன்: 320 பிக் செல் உயரத்தை 240 பிக்செல் அகலத்தில் பெருகியவாறு
  - ◻ படிமத்தின் வண்ணச்செறிவு: 24பிட் வண்ணம் அல்லது 8 பிட் வண்ணம் அல்லது 8பிட் சாம்பல் அளவீடு (குறிப்பு:ஒரே வண்ணப்படிமங்கள் (2 பிட் வண்ணச்செறிவுகொண்டவை) ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
- **சமர்ப்பிக்கப்பட்ட ஒரு நிழற்படத்தை வருடல் :** பதியப்பட்ட ஒரு நிழற்படம் வருடப்படுவதற்கு முன்னதாக அது, பின்வரும் விவரக் குறிப்புக்கு ஏறபுடையதாக அமைந்திருத்தல் வேண்டும்:
  - ◻ பதிவின் அளவு: 2அங்குலம் x 2அங்குலம் (50மிமீ x 50மிமீ) சதுரம்
  - ◻ பதிவின் நிறம்: படிமம், வண்ணத்தில் அல்லது சாம்பல் அளவீட்டை உடைத்ததாய் அமைந்திருக்க வேண்டும்.

நிழற்படப்பதிவு, தொகுப்பு விவரக் குறிப்புகளுக்கு இயைந்ததாகவும் அமைந்திருத்தல் வேண்டும். பதிப்பின் அளவு, நிறம் மற்றும் தொகுப்பு விவரக்குறிப்புகளுக்கு அமைந்ததாக இருப்பின் பின்வரும் வருடல் விவரக் குறிப்புகளைப் பயன்படுத்தி அப்பதிவினை வருடுக

- ◻ வருடல் பிரிதிறன்: ஓர் அங்குலத்திற்கு, 150 புள்ளிகள் (dpi) அளவிற்குப் பிரிதிறன் அமைந்ததாக வருடவும்.
- ◻ படிமக்கோப்பளவு: மிகக் கூடுதலான படிமக் கோப்பளவு, அறுபத்து ஈராயிரத்து ஐந்நூறு (62,500) பைட்களாகும்.
- ◻ படிமக்கோப்பின் வடிவமைப்பு: அப்படிமம், கூட்டு நிழற்பட நிபுணர்கள் குழுவின் (JPEG) நியதிக்குட்பட்டதாய் அமைந்திருத்தல் வேண்டும்.
- ◻ படிமப்பிரிதிறன்: 300 x 300 பிக்செல்கள்
- ◻ படிமத்தின் வண்ணச்செறிவு: 24 பிற்வண்ணம் அல்லது 8 பிற்வண்ணம் அல்லது 8 பிற்சாம்பல் அளவீடு(குறிப்பு: ஒரே வண்ணப்படிமங்கள் (2பிற் வண்ணச்செறிவு கொண்டவை) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

## விண்ணப்பம்

DV-2007 லொத்தரில் பிரவேசிக்க, ஒரேயொரு மார்க்கமே உண்டு. விண்ணப்பகாரர்கள் எட்டக்கூடிய ஒரே பெறுவழியான 'www.dvlottery.state.gov' என்ற முகவரியில் கிடைக்கக்கூடிய மின்னணுசார் பல்வகை விசா நுழைவுப்படிவமொன்றிலேயே விண்ணப்பிக்கவேண்டும். (EDV Entry Form) விண்ணப்பதாரரின் நுழைவைத தகுதியற்றதாக்கிவிடும். EDV நுழைவுப்படிவத்தில் பின்வரும் தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பகாரர்கள் கோரப்படுவர்.

1. **முழுப்பெயர்** - கடைசிப்பெயர்/குடும்பப்பெயர், முதல்பெயர், நடுப்பெயர்
2. **பிறந்ததிகதி** - நாள், மாதம், ஆண்டு
3. **பால்** - ஆண்/பெண்
4. **பிறந்த** - பட்டணம்,நகரம்
5. **பிறந்த நாடு** - விண்ணப்பகாரரின் பிறந்த நாட்டின் தற்போதைய பெயர்
6. **விண்ணப்பகாரரின் நிழற்படம்** - நிழற்பட விபரங்களுக்கு பக்கம் 3 இல் உள்ள தகவலைப் பார்க்க
7. **தபால் முகவரி** - முகவரி, நகரம், பட்டணம், மாவட்டம், நாடு,மாகாணம், ராஜ்யம், தபால் குறியீடு, Zip குறியீடு
8. **தொலைபேசி இலக்கம்** - விரும்பின்
9. **மின்னஞ்சல் முகவரி** - விரும்பின்
10. **விண்ணப்பகாரர் வாழும்நாடு அவர் பிறந்த நாட்டிலிருந்து வேறுபட்டிருப்பின் குடியுரிமைபெறத் தகைமையுடையதாக விளங்கும்** - அந்நாட்டின் பெயர் விண்ணப்பகாரர் அவர்/அவள், தாம் பிறந்த நாட்டிற்குப் புறம்பான ஒரு நாட்டில் வாழும் உரிமை கோரியிருப்பின் இத்தகைய நுழைவுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும்.
11. **விவாக அந்தஸ்து** - விவாகமாகவில்லை, விவாகமாகிவிட்டது, மணநீக்கமாகிவிட்டது, விதவை, சட்டப்படி பிரிந்திருத்தல்)
12. **விவாகமாகாத 21 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை** - ஐ.அ வில் சட்டப்படி நிரந்தரமாக வதியும் பிள்ளைகள் அல்லது அமரிக்க பிரஜைகள் நீங்கலாக
13. **வாழ்க்கைத்துணைபற்றிய தகவல்கள்** - பெயர், பிறந்த திகதி, பால், பிறந்த நகரம், பட்டணம, பிறந்த நாடு, நிழற்படம்
14. **பிள்ளைகள் பற்றிய தகவல்கள்** - பெயர், பிறந்த திகதி, பால், பிறந்த நகரம், பட்டணம், பிறந்த நாடு, நிழற்படம்

**குறிப்பு:** விண்ணப்பகாரரின் வாழ்க்கைத்துணை மற்றும் தமக்குப் பிறந்த பிள்ளைகளினதும் சட்ட பூர்வமாகச் சுவீகரிக்கப்பட்ட பிள்ளைகளினதும் மற்றும் அவனுடைய மனைவியுடைய பிள்ளைகளினதும், விவாகம் செய்யாத 21 வயதுக்குட்பட்ட அத்தகைய பிள்ளைகளினதும் பெயர், பிறந்ததிகதி, பிறந்த இடம் யாவும் விண்ணப்பப்படிவத்தில் சேர்க்கப்படல் வேண்டும். (அமெரிக்காவில் ஏற்கனவே பிரஜையாக அல்லது சட்டபூர்வ நிரந்தர குடியிருப்பாளராக இருக்கும் பிள்ளைகள் தவிர) விண்ணப்பக்காரின் ஒரு பிள்ளை, ஒரு பெற்றார், விண்ணப்பகாரரோடு தற்போது இல்லாவிடிலும் விண்ணப்பக்காரரோடு இடம்பெயராவிடினும், கூட அப்பிள்ளையின் விபரங்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். விவாகமான பிள்ளைகளும் 21வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளும் DV விசாவிற்கு அருகதையுடையவர்கள் அல்லர். எல்லாப் பிள்ளைகளினதும் விபரங்களை உள்ளடக்காவிடில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (பெரும்பாலாகக் கேட்கப்படும் வினாக்கள் என்ற பட்டியலில் ,வினா 11 ஐப் பார்க்க. பிள்ளையைப் பெற்றவரை, நீங்கள் இப்போதும்கூட சட்டபூர்வமாக மணம்செய்யாதிருப்பினும், மற்றும் வாழ்க்கைத்துணையோ அல்லது பிள்ளையோ தற்போது உங்களோடு, கூட வாழாதிருப்பினும், அத்தோடு அல்லது உங்களோடு கூடவே புலம்பெயர மாட்டார்கள் என்றபோதிலும் கூட, விவாகமான பிள்ளைகளும் மற்றும் 21 வயதான அல்லது அதற்குக் கூடுதலான வயதுடைய பிள்ளைகளும் இந்த, பல்வகை விசாக்களுக்கு தகுதிபெறமாட்டார்கள் என்பதைக் கருத்திற்கொள்ள. தகுதிக்கான சகல பிள்ளைகளையும் பட்டியலிடத்தவறின் நீங்கள் விசா பெறும் தகுதியை இழக்க நேரிடும். (அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளின் நிரல் அறிய 11வது கேள்வியைப் பார்க்க)

## விண்ணப்பகாரர்களைத் தெரிவு செய்தல

**விண்ணப்பகாரர்கள், தகுதிபெறும் சகல விண்ணப்பங்களிலுமிருந்து கணினியினால் தற்போக்குமுறையில் தெரிவு செய்யப்படுவார்கள்.** தெரிவுசெய்யப்படுவோருக்கு, 2006 மே -ஜுலை மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தபால் மூலம் தகவல் தெரிவிக்கப்படும். மற்றும் ஐ.அ வுக்கான குடிவரவு தொடர்பிலான கட்டணங்கள் பற்றிய தகவல்கள் உட்பட மேலதிக அறிவுறுத்தல்களும் வழங்கப்படும். **தெரிவுசெய்யப்படாதோர், எத்தகைய தகவல்களையும் பெறமாட்டார்கள்.** ஐ.அ தூதரங்களும், காவற்தூதரங்களும், வெற்றிபெற்ற விண்ணப்பப்காரர்களின் பெயர்ப்பட்டியலொன்றை வழங்க முடியாதிருக்கும். வெற்றிபெறும் விண்ணப்பகாரர்களின் வாழ்க்கைத்துணைகளும் 21 வயதுக்குட்பட்ட திருமணமாகாத பிள்ளைகளும் சேர்ந்து செல்வதற்கு அல்லது பிரதான விண்ணப்பகாரரோடு பின்னர் இணைந்து கொள்வதற்கான விசாக்களுக்கும் மனுச்செய்யலாம். DV -2007 க்கான விசாக்கள், 2006 ஒக்ற்றோபர் 1ந் திகதிக்கும், 2007 செப்ற்றெம்பர் மாதம் 30ந்திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் விநியோகிக்கப்படும்.

யதார்த்தத்தில் ஒரு விசாவைப்பெறுவதற்குத், தற்போக்கு முறையில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணபகாரர்கள் ஐ.அ.சட்டத்தின் கீழ், **சகல** தகைமையினையும் பூர்த்தி செய்தாகவேண்டும். விண்ணப்பங்களை ஒழுங்குபடுத்துவதும் வெற்றிபெற்ற விண்ணபகாரர்களுக்கும் தகுதிபெற்ற அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் பல்வகை விசாக்கள் வழங்குவதற்குமான பணி, 2007 செப்ற்றெம்பர் 30ந் திகதி நள்ளிரவுக்குள் கட்டாயம் நிகழ வேண்டும். இத்திகதிக்குப் பின்னர், எக்காரணங்கொண்டும் பல்வகை விசாக்கள் வழங்குவதோ அன்றி சமன்படுத்தலுக்கான அங்கீகாரமோ அல்லது இத்திகதிக்கு பின் ஐ.அ வில் விண்ணபகாரருடன் இணைந்து கொள்வதற்காகக் குடும்ப அங்கத்தினர்கள், பல்வகை விசாக்களைப்பெறவோ முடியாது.

### முக்கிய அறிவித்தல்

வருடாந்த DV நிகழ்ச்சித்திட்டத்தில் பிரவேசிப்பதற்கு எந்த விதக்கட்டணமும் அறவிடப்படுவதில்லை. ஐ.அ அரசாங்கம் D.V நிகழ்ச்சித்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஐ.அ. அரசாங்கம் வெளி ஆலோசகர்கள் அல்லது தனிப்பட்ட சேவையினர் எவரையுமோ பணிக்கமர்த்துவதில்லை. விண்ணப்பகாரர்களுக்கு DV தொடர்பிலான ஆவணங்களைத் தயாரிக்க உதவும் இடைநிலையாளர்கள் எவருமோ ஐ.அ. அரசாங்கத்தின் அதிகாரமோ அல்லது சம்மதமோ இன்றியே அதனைச் செய்கின்றனர். DV பிரவேச ஆவணமொன்றைத் தயாரிப்பதற்கு எந்தவொரு வெளி இடைநிலையாளர்களையும் பயன்படுத்துவது, முற்றிலும் விண்ணப்பகாரரின் சொந்த விருப்பத்திலேயே தங்கியுள்ளது.

விண்ணப்பதாரி ஒருவரினால் மின்னணுசார் முறையில் நேரடியாகச் சமர்ப்பிக்கப்படும் தகுதியுடைய ஒரு விண்ணப்பம், பணம் செலுத்தி அமர்த்தப்பட்ட ஓர் இடைநிலையாளரால் விண்ணப்பகாரர்களுக்காக பூர்த்தி செய்யப்பட்டதாக மின்னனுசார் முறையில் அவரால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தைப்போன்று, கென்ற்றக்கி காவற்தூதர் நிலையத்திலுள்ள கணனியினால் தெரிவுசெய்யப்படுவதற்கு சமமான வாய்ப்பைக் கொண்டுள்ளது. லொத்தர் பதிவுக் காலப்பகுதியின்போது கிடைக்கப்பெறும் ஒவ்வொரு விண்ணப்பமும் அந்தந்தப் பிராந்தியத்தினுள், தற்போக்கு முறையில் தெரிவு செய்யப்படுவதற்கு ஒரு சமமான வாய்ப்பைக் கொண்டிருக்கும். எனினும் ஓர் ஆளிடமிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறின், விண்ணப்பத்தின் மூலம்இ எத்தகையதாயிருப்பினும் அதனைப்பதிவு செய்வதிலிருந்து அந்த ஆள், தகுதியற்றவராக்கப்பட்டுவிடுவார்.

## DV பதிவு தொடர்பில் அடிக்கடி கேட்கப்படும் வினாக்கள்

### 1. "சுதேசி " என்ற பதம் தரும் கருத்து என்ன? தகுதிபெறும் நாடொன்றில் பிறக்காத ஆட்கள் விண்ணப்பிப்பதற்கான நிலைமைகள் ஏதேனும் உண்டா?

“சுதேசி” என்பது பொதுவில், தனிப்பட்ட ஒருவர் தற்போது வசிக்கும் நாடு அல்லது அவரின் தேசிய அந்தஸ்து எத்தகையதாக இருப்பினும், ஒரு குறிப்பிட்ட நாட்டில் பிறந்த ஒருவர் எனப் பொருள்படும். ஆனால் குடிவரவு நோக்கங்களுக்காக “சுதேசி“ என்பது குடிவரவு மற்றும் தேசியம் சட்டத்தின் 202 (b) பிரிவுக்கு அமைவான ஏற்பாடுகளின் கீழ், அவரோ/அவளோ பிறந்த

நாட்டுக்குப்புறம்பாக ஒரு நாட்டுக்குப் பொறுப்பு "சார்த்தப்படுவதற்கு" உரித்துடையாராகவும் பொருள்படும்.

உதாரணத்துக்கு, ஒரு பிரதான விண்ணப்பகாரர் இவ்வாண்டின் DV நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தகுதிபெறாத ஒரு நாட்டில் பிறந்திருப்பின், அவருடைய/அவளுடைய வழிவரு வாழ்க்கைத்துணை பிறந்த அந்த நாட்டுக்குப் பொறுப்புச்சார்த்தப்பட, அவரோ/அவளோ உரிமை கோரலாம். ஆனால் வாழ்க்கைத்துணையும் தகுதிபெற்றவராக ஒரு DV -2 வழங்கப்பட்டாலொழிய அவருக்கு/அவளுக்கு ஒரு DV-1 வழங்கப்படமாட்டாது. அத்தோடு அவர்களிருவருமோ அந்த DV க்களோடு ஓரே சமயத்தில் ஐ.அ வுக்குள் நுழைய வேண்டும். அதேமாதிரியொன்றில், பெற்றோரில் தங்கியிருக்கும் பருவமடையாத ஒரு பிள்ளையையும் பெற்றோரின் பிறந்த நாட்டுக்கு உரிமை சார்தப்பட்டவாராக ஆக்கமுடியும்.

இறுதியாக இவ்வாண்டு DV நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தகுதிபெறாத ஒரு நாட்டில் பிறந்த எந்தவொரு விண்ணப்பகாரரும் விண்ணப்பகாரர் பிறந்த சமயத்தில் பெற்றோரில் எவருமோ தகுதி பெறாத அந்த நாட்டில் வாழாதிருந்திருப்பின் பெற்றோர்கள் இருவரில் ஒருவர் பிறந்த அந்த நாட்டின் உரிமைசார்த்தப்பட்டவராக முடியும். பொதுவில், மக்கள் தாம் பிறக்காத ஒரு நாட்டினது வதிவிடக்காரர்களாக அல்லது சட்டப்படி அந்த நாட்டினைப் பிரதிநிதித்துவப்படுத்துவோராக அவர்கள் அந்த நாட்டுக்குத்தற்காலிகமாகச் சென்றுவரின் அல்லது ஒரு கம்பனி அல்லது அரசாங்கத்தின் சார்பில் வியாபாரத்துக்காக அல்லது தொழில் திறமை காரணமாக அந்நாட்டில் தங்கியிருப்பின் அவர்கள் குடியிருப்பாளர்களாகக் கருதப்படுவதில்லை.

மாற்றுச்சார்த்துரிமை கோரும் ஒரு விண்ணப்பகாரர், பதிவுக்காக அனுப்பப்படும் விண்ணப்பத்தில் அத்தகைய தகவலைக் **கட்டாயமாகக்** குறிப்பிட்டாக வேண்டும்.

## 2. இந்தப்பல்வகை விசாப்பதிவுக்கான விண்ணப்ப நடைமுறைகளில் புதிதாக ஏதேனும் தேவைகள் அல்லது மாற்றங்கள் செய்யப்பட்டு உள்ளனவா?

DV-2007 லொத்தருக்கான விண்ணப்பங்கள் அனைத்தும் மின்னனுசார் முறைமையில் www.dvlottery.state.gov" என்ற தள முகவரிக்கு,2005 ஒக்டோபர் 7 புதன் கிழமைக்கும் 2005 டிசம்பர் 4 ஞாயிற்றுக் கிழமைக்குமிடைப்பட்ட காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்படவேண்டும். காகித விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

பல்வகை விசா நடைமுறையினை அதிதிறமையாகவும், பாதுகாப்பானதாகவும் செயற்படுத்துவதற்காக வெளிவிவகாரத் திணைக்களம், கடந்த ஆண்டு, லொத்தர் தேர்வுக்கென மின்னனுசார் பதிவுமுறைமையொன்றினை நிறைவேற்றியது. சட்டவிரோதமான குடிவரவு நோக்கங்களுக்காக அல்லது மிகையான விண்ணப்பங்கள் சமர்ப்பிப்போரைக் கண்டறிவதற்காக இத்திணைக்களம், விசேஷ தொழில் நுட்பங்களையும் ஏனைய வழிமுறைகளையும் பயன்படுத்துகிறது.

DV -2007 பல்வகைக்குடிவரவு விசா நிகழ்ச்சித்திட்டப் பதிவுக்காலம், 2005 ஒக்ற்றோபர் 5, கிழக்கு நியமவலகு நேரம் நண்பகல் முதல் 2005 டிசம்பர் 5 கிழக்கு நியமவலகு நேரம் நண்பகல் வரை அமைந்திருக்கும்.

## 3. குடும்ப அங்கத்தினர் ஒவ்வொருவருக்குமா அல்லது பிரதான விண்ணப்பகாரருக்கு மட்டுமா கையொப்பங்களும், நிழற்படங்களும் தேவைப்படும்?

சமர்ப்பிக்கப்படும் மின்னனுசார் பல்வகை விசா விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிடத்தேவையில்லை. விண்ணப்பகாரர், அவரின்/அவளின் வாழ்க்கைத்துணை மற்றும் 21 வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளினதும் சமீபத்தில் பிடிக்கப்பட்ட தனித்தனியான நிழற்படங்கள் தேவைப்படும். குடும்ப அல்லது சேர்ந்து பிடிக்கப்பட்ட நிழற்படங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. நிழற்படத் தேவைகளுக்கு அவசியமான தகவலை, இந்த அறிக்கையின் 3 ம் பக்கத்தில் சரிபார்த்துக்கொள்க.

## 4. ஏன் சில நாடுகளின் சுதேசிகள், இந்தப் பல்வகை நிகழ்ச்சித்திட்டத்திற்கு அருகதையற்றவராகின்றனர்?

ஐ.அ வில் குடியேறுவதற்காகப் பெரும் எண்ணிக்கையான ஆட்களை அனுப்பும் நாடுகளைவிட, ஏனைய நாடுகளைச் சாந்த ஆட்களுக்குக் குடியேற வாய்ப்பளிப்பதை நோக்கமாகக்கொண்டதுதான், இந்தப் பல்வகை விசா முறைமை. அதிக எண்ணிக்கையில் ஆட்களை அனுப்பிவரும் நாடுகளைச் சேர்ந்த சுதேசிகளுக்குப் பல்வகை விசாக்கள் வழங்கப்படக் கூடாதெனச் சட்டம் கூறுகிறது. கடந்த 5 ஆண்டு காலப்பகுதியில், குடும்பத்தினராக மற்றும் தொழிலை அடிப்படையாகக் கொண்ட பிரிவுகளைச் சேர்ந்தோராக மொத்தம் 50,000 ஆட்கள் ஐ.அ வுக்குக் குடிபெயர்வதற்கான விசா பிரிவுகளுக்கு உட்படுத்திய நாடுகளே, அவை என இச்சட்டம் விளக்கந்தருகிறது. ஆண்டுதோறும் லொத்தர் முறை மூலம் இடம்பெறும் தேர்விலிருந்து, அத்தகைய நாடுகளை அடையாளங் காண்பதற்காக ஐ.அ பிரஜா உரிமை மற்றும் குடிவரவுச்சட்டங்களுக்குப் பொறுப்பான (USCIS), கடந்த 5 ஆண்டுகளில் குடும்பரீதியாகவும், மற்றும் வேலைவாய்ப்புகளுக்காகவும் குடிவரவு அனுமதி எண்ணிக்கையைச் சரியாக நிர்ணயித்து அத்தகைய சுதேசிகளை விலக்கி வைப்பதற்காக, ஆண்டுதோறும் அவ்வெண்ணிக்கை அளவை ஒன்று திரட்டிக் கணித்துவருகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் DV அனுமதிக் காலத்திற்கு முன்னதாக வேறானதொரு நிர்ணயம் செய்யப்படுவதால், தகுதிபெறாத சுதேசிகளைக்கொண்ட நாடுகளின் நிரல், ஓர் ஆண்டிலிருந்து அடுத்த ஆண்டில், மாற்றமடையலாம்.

## 5. DV-2007 க்கான எண்ணிக்கையினை மட்டுப்பாடு, எத்தகையது?

சட்டத்தின் மூலம், ஐ.அ பல்வகைக்குடிவரவு நிகழ்ச்சித்திட்டம், ஒவ்வொரு ஆண்டிலும் தகுதிபெறும் ஆட்களுக்கென, மிகக்கூடியதாக 55,000 பேருக்கு நிரந்தரவதிவு விசாக்களை வழங்கி வருகிறது. எனினும், காங்கிரஸினால் 1977ல் நிறைவேற்றப்பட்ட நிக்கரகுவா சீரமைப்பு மற்றும் மத்திய அமரிக்க நிவாரணச்சட்டம் (NACARA) முன்கூட்டியதாக DV -99 முதல், அவசியமாயிருக்கும் காலம்வரை, ஆண்டுதோறும் ஒதுக்கப்பட்டுவரும் 55,000 பல்வகை விசாக்களில் 5000, NACARA திட்டத்தின் கீழ்ப்பயன்படுத்தப்படுவதற்கெனத் தனியாக வைக்கப்பட்டிருக்கின்றது. உண்மையில் 50,000 ஆன குறைப்பு, DV-2000 உடன் தொடங்கி DV-2007 க்காகவும் நடைமுறையில் இருந்துவருகிறது.

## 6. DV-2007 க்கான, பிராந்திய பல்வகை வீசா மட்டுப்பாடுகள், எத்தகையன?

குடிவரவு தேசியம் சட்டம் (INA) இன் பிரிவு 203(C) குறித்துரைக்கும் ஒருவாய்ப்பாட்டுக்கு அமைய ஐ.அ பிரஜா உரிமை மற்றும் குடிவரவு சேவைகள் (USCIS) DV பிராந்தியமட்டுப்பாடுகளை, ஒவ்வொரு ஆண்டிலும் தீர்மானிக்கிறது. USCIS கணிப்புகளைப் பூர்த்தி செய்தவுடன், இந்த, பிராந்திய விசா மட்டுப்பாடுகள் அறிவிக்கப்படும்.

## 7. DV-2007 நிகழ்ச்சித்திட்டத்திற்கான விண்ணப்பங்கள், எப்போது ஏற்றுக்கொள்ளப்படும்?

DV-2007 அனுமதிக்காலம் 2005, ஒக்ற்றோபர் 5 புதன்கிழமை EST நேரம் நண்பகல் தொடங்கி, 2005, டிசம்பர் 4 ஞாயிற்றுக்கிழமை EST நேரம் நண்பகல்வரை 63 நாட்களுக்கு நீடிக்கும். ஒவ்வொரு ஆண்டிலும், பதிவுசெய்யும் காலப்பகுதியின் போது, இலட்சக்கணக்கானோர் விண்ணப்பிக்கின்றனர். இப்பெருந்தொகையான விண்ணப்பங்களைத் தெரிவு செய்து, வெற்றிபெறும் விண்ணப்பகாரர்கள் பற்றிய விவரங்களைத் துல்லியமாகக் கணீப்பீடு செய்வதற்கான அளப்பரிய பணிக்கு அவை வழிகோலுகின்றன. விண்ணப்பங்கள் செய்வதற்கான காலப்பகுதியை, ஒக்ற்றோபர் - டிசம்பர் மாதங்களின்போது கொண்டிருப்பது, வெற்றிபெறும் விண்ணப்பகாரர்களுக்கு நேரகாலத்தோடு அனுப்பி அறிவிப்பதற்கும், விசா வழங்குவதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்கும், அப்பணியைப் பூர்த்தி செய்வதற்கும் அவர்களுக்கும் எங்களுடைய தூதரங்கள் மற்றும் காவறதூதரகங்களுக்கும் போதிய அவகாசம் வழங்குவதாக அமையும். விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் காலப்பகுதியின் போது அவற்றை வேளைக்கே அனுப்புவது உசிதமாகவிருக்கும் என விண்ணப்பகாரர்களுக்கு, வலுவானதான உற்சாகமளிக்கப்படுகிறது. பதிவுகால முடிவுக்கட்டத்தில் அளவுக்கதிகமான வலுவான வேண்டுகோள் விடுக்கப்படுகிறது அவசியமாவது, அம் முறைமையின் செயற்பாட்டு வேகத்தைக் குறைந்துவிடக்கூடும். 2005, டிசம்பர் 4 ஞாயிற்றுக்கிழமை EST நேரம் நண்பகலுக்கு பிறகு எக்காரணங்கொண்டும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

## 8. ஐ.அ. உள்ள ஆட்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியுமா?

ஆம். விண்ணப்பகாரர் ஐ.அ.விலோ அன்றி மற்றொரு நாட்டிலோ இருந்தாலும், அங்கிருந்தோ அல்லது வெளிநாட்டிலிருந்தோ விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.

## 9. ஆண்டு DV பதிவுக்காலத்தின்போது ஒவ்வொரு விண்ணப்பகாரரும் ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்பலாம் என மட்டுப்பாடு ஏதும் உண்டா?

ஆம். ஒவ்வொரு பதிவு காலத்தின்போதும் ஒருவர் தனக்காக ஒரு விண்ணப்பத்தை மட்டுமே அனுப்பலாம் என்பதையே, சட்டம் அனுமதிக்கிறது அல்லது **விண்ணப்பகாரருக்காக, ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படின் அத்தகையோர் நிராகரிக்கப்படுவர்.** பதிவுக்காலத்தின்போது பல விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்போரை இனங்காணுவதற்கென வெளிவிவகாரத்திணைக்களம் அதி நவீன தொழிலநுட்பங்களையும் ஏனைய வழிமுறைகளையும் பயன்படுத்தும். ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்போர் நிராகரிக்கப்படுவதோடு வெளிவிவகாரத்திணைக்களம் ஒரு மின்னணுசார் பதிவையும் நிரந்தரமாக வைத்திருக்கும். ஒவ்வொரு ஆண்டிலும்வழக்கமான பதிவுக்காலத்தின்போது விண்ணப்பகாரர்கள் விண்ணப்பிக்க முடியும்.

## 10. ஒரு கணவனும் மனைவியும் வெவ்வேறாக விண்ணப்பிக்க முடியுமா?

ஆம். தகுதித்தேவைகளை அவர்கள் ஒவ்வொருவரும் பூர்த்தி செய்யமுடியுமாயின், ஒரு கணவனும் மனைவியும் தனித்தனியாக ஒவ்வொரு விண்ணப்பத்தை அனுப்ப முடியும். அவாகளில் யாராவது ஒருவர் தெரிவுசெய்யப்பட்டால் மற்றவர் வழிவரு தகைமைக்கு உரித்துடையராவார்.

## 11. எனது DV விண்ணப்பத்தில் குடும்ப உறுப்பினர்கள் எதனைச் சேர்க்க வேண்டும்?

உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் உங்களின் வாழ்க்கைத்துணையையும் கணவனோ அல்லது மனைவியோ, 21 வயதுக்குக்குறைந்த விவாகமாகாத சகல பிள்ளைகளையும், எற்கனவே ஐ.அ பிரஜைகளாக உள்ளவர்கள் அல்லது சட்டப்படி நிரந்தரக் குடியிருப்பாளர்கள் தவிர்ந்ததாக, பதிய வேண்டும். நீங்கள் உங்கள் துணையை தற்போது அவரிடம்/அவளிடமிருந்து பிரிந்திருப்பினும் நீங்கள் சட்டப்படி பிரிந்திருக்காதவரை (அதாவது நீதிமன்றமொன்றினால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக எழுத்து மூலம் செய்து கொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தம் அல்லது ஒரு நீதிமன்றக்கட்டளையாக) அதில் பதிய வேண்டும். நீங்கள் சட்டப்படி பிரிந்திருந்தால் அல்லது மணநீக்கம் செய்திருந்தால் உங்களின் முன்னைய வாழ்க்கைத்துணையைப்பதிய வேண்டிய தேவையில்லை.
**மணமாகாதவர்களாகவும் 21 வயதுக்குட்பட்டவர்களாகவுமுள்ள உங்கள் பிள்ளைகள் அனைவரையும் பதிவு செய்யவேண்டும்.** உங்கள் வாழ்க்கைத்துணையின் பிள்ளைகளாகவோ அல்லது உங்கள் நாட்டின் சட்டத்திற்கமைந்த வளர்ப்புப் பிள்ளைகளாக இருப்பினும் சரியே, அத்தகைய பிள்ளை ஏற்கனவெ ஒரு ஐ.அ பிரஜையாகவோ அல்லது சட்டபூர்வமாக நிரந்தரமாகப் வதிபவராய் இல்லாதவரை, 21 வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளையும் இடம்பெறச் செய்க. அவர்கள் இப்போது உங்களுடன் சேர்ந்து இருக்காதிருப்பினும் அல்லது DV திட்டத்தின் கீழ் அவர்களின் குடிபெயர்வதற்கு நீங்கள் எண்ணங்கொண்டிருக்கவில்லை என்ற நிலையிலும், நீங்கள் உங்கள் விண்ணப்பத்தில் உங்களின் குடும்ப உறுப்பினர்களைப்பதிவு செய்திருப்பது, அவர்கள் பின்னர் உங்களுடன் கட்டாயம் பிரயாணம் செய்யவேண்டும் எனப்பொருள்படாது. அவர்கள் போகாமல் இருப்பதைத் தெரிவுசெய்யவும் கூடும்.

எனினும், நீங்கள் ஆரம்பத்தில் செய்த விண்ணப்பத்தில் இடம் பெறாது விடப்பட்ட, உங்களில் தங்கியிருக்கும் ஒரு தகுதியுடைய குடும்ப உறுப்பினரின் பெயரை உங்களின் விசா விண்ணப்பத்தில் சேர்த்திருப்பின், உங்களுடைய அந்த விடயம், நிராகரிக்கப்பட்டுவிடும். (ஆரம்பத்தில் விண்ணப்பம் அனுப்பப்பட்ட சமயத்தில் உங்களில் தங்கியிருந்த ஆட்களுக்கே இது பொருந்தும். பின்னொரு திகதியில் பெறப்பட்டவர்களுக்கல்ல) அவரோ அல்லது அவளோ உங்கள் விண்ணப்பத்தில் சேர்க்கப்பட்டிருப்பினும் உங்களின் வாழ்க்கைத்துணை இன்னுங் கூட தனியானதொரு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கக் கூடும். உங்கள் குடும்பத்தில் தங்கியுள்ள அனைவரினதும் விவரங்கள் இரண்டு விண்ணப்பங்களிலும் இடம்பெற்றுள்ளவரை. மேலேயுள்ள 10வது கேள்வியைப் பார்க்க.

## 12. ஒவ்வொரு விண்ணப்பகாரரும் தமது சொந்த, அவரின்/அவளின் விண்ணப்பப்பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டுமா அல்லது ஒரு விண்ணப்பகாரரின் சார்பில், வேறொருவர் செயற்பட முடியுமா?

விண்ணப்பகாரர்கள் தங்களின் சொந்த விண்ணப்பங்களைத் தாங்களாகவே தயாரித்துச் சமர்பிக்க முடியும் அல்லது அவர்களுக்காக அவ்விண்ணப்பத்தை வேறொருவர் சமர்ப்பிக்கலாம். ஒரு விண்ணப்பத்தை விண்ணப்பகாரரே நேரடியாகச் சமர்ப்பித்தாலும்சரி, அல்லது ஒரு தத்துவக்காரர், நண்பர்,உறவினர் போன்றோரின் உதவியோடு சமர்ப்பிக்கப்படினும்சரி, ஒருவரின் பெயரில் ஒரு விண்ணப்பம் மட்டுமே சமர்ப்பிக்க முடியும். அந்த விண்ணப்பம் தெரிவுசெய்யப்பட்டால் விண்ணப்பத்தில் தரப்பட்டிருக்கும் அவ்விலாசத்திற்கே அறிவித்தல் கடிதம் அனுப்பி வைக்கப்படும்

## 13. கல்வி அல்லது தொழில் அனுபவம் தொடர்பிலான தேவைகள் யாவை?

ஒவ்வொரு விண்ணப்பகாரரும் குறைந்தது ஓர் உயர் பாடசாலைக்கல்வியையோ அல்லது அதற்குச் சமமான கல்வி அறிவையோ பெற்றிருக்கவேண்டும். அல்லது குறைந்தது இரண்டு ஆண்டு காலப்பயிற்சி அல்லது அனுபவத்தை அவசியமாக்கும் ஒரு தொழிலில் இரண்டு ஆண்டு காலதொழில் அனுபவத்தை கொண்டிருக்க வேண்டும் எனச் சட்டமும் ஒழுங்க விதிகளும் வலியுறுத்துகின்றன. ”உயர் பாடசாலைக்கல்வி அல்லது அதற்குச் சமமானது” என்பதற்கு, 12 ஆண்டுகாலத்தை உள்ளடக்கிய ஆரம்ப, 2ம் நிலைக்கல்வியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருப்பது அல்லது ஐ.அ வின் உயர்பாடசாலைக் கல்வியுடன் ஒப்பிடக் கூடியதாக மற்றொரு நாட்டில் முன்கல்வியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் என வரைவிலக்கணம் கூறப்படுகிறது. கல்வி அல்லது வேலை அனுபவம் என்பவற்றிற்கான ஆவண ஆதாரம், லொத்தர் பிரவேசப் பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்படக்கூடாது. ஆனால் விசாவுக்கான நேர்முகப்பரீட்சையின் போது காவற்தூதுவ அதிகாரியிடம் கட்டாயம் சமர்ப்பிக்கபட வேண்டும். வேலை அனுபவம் தொடர்பிலான தகுதியை நியாயப்படுத்துவதற்கான வரைவிளக்கங்களை தொழில்திணைக்களத்தின் O* Net on Line தரவுத்தளம் பயன்படுத்தவும்.

## 14. வெற்றிபெறும் விண்ணப்பகாரர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்படுவார்கள்?

கென்றக்கி காவற்தூதர் நிலையத்தில், ஒவ்வொரு பிராந்தியத்திலுமிருந்து கிடைத்த சகல விண்ணப்பங்களுக்கும் தனித்தனியாக இலக்கமிடப்படும். பதிவு செய்யும் காலம் முடிவடைந்த பின்னர் ஒரு கணினி ஒவ்வொரு பூகோளப்பிராந்தியத்திலிருந்தும் கிடைக்கப்பெற்ற சகல விண்ணப்பங்களிலிருந்தும் ,தற்போக்காக விண்ணப்பங்களைத் தெரிவு செய்யும். ஒவ்வொரு பிராந்தியத்திற்குள்ளுமிருந்து அவ்வாறு தற்போக்கில் தெரிவு செய்யப்படும் முதலாவது விண்ணப்பம் முதலாவதாகப் பதியப்படும். இவ்வாறே இரண்டு மூன்றென அவை தொடர்ந்து பதிவு செய்யப்படும். பதிவு காலத்தின்போது கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்திற்கும் ஒவ்வொரு பிராந்தியத்திற்குள்ளுமிருந்த தெரிவு செய்யப்படுவதற்கான சம வாய்ப்பு உண்டு. விண்ணப்பம் ஒன்று தெரிவுசெய்யபட்ட பின்னர் கென்றக்கி காவற்தூதுவர் நிலையம், விண்ணப்பகாரருக்கு அதனைத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை அனுப்பிவைக்கும். அது விசா தொடர்பிலான அறிவுறுத்தல்களை வழங்கும். தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு ஐ.அ காவற்தூதரகம் விசா நேர்முகப்பரீட்சைக்கு தோற்றவருமாறு அறிவுறுத்தப்படும்வரை அல்லது அந்தஸ்து மாற்றத்துக்காக இயலுமானவர்கள் ஐ.அ விலுள்ள ஒரு USCIS அலுவலகத்திற்கு விண்ணப்பிக்கும்வரை கென்றக்கி காவற்துதரக நிலையம், அவ்விடயம் தொடர்பான செயற்பாட்டைத் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

## 15. வெற்றிபெறும் விண்ணப்பகாரர்கள் USCIS தங்களுடைய அந்தஸ்தைச் சீர்படுத்தமுடியுமா?

ஆம். INA யின் 245ம் பிரிவின் நியதிகளின் கீழ் அந்தஸ்தை வேறுவிதமாக மாற்றுவதற்குத் தகுதி பெற்றிருப்பின்( ஐ.அ வில் தன்னளவில் பிரசன்னமாயிருக்கும்) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர்கள் அந்தஸ்தினை நிரந்தர குடியிருப்பாளராச் சீர்படுத்தி அமைத்துக்கொள்வதற்கு ஐ.அ பிரஜா உரிமை மற்றும் குடிவரவு சேவைகள் அமைப்புக்கு (USCIS) விண்ணபிக்கலாம்.

2007 செப்ற்றெம்பர் 30 அன்று, DV -2007 நிகழ்ச்சித்திட்டம் காலாவதியாகும் என்பதால் விண்ணப்பகாரர்கள் அதற்கு முன்னதாக, வெளிநாட்டு வழிவருநர் எவரினதும் தொடர்பிலான செயற்பாட்டு நடைமுறை உட்பட தங்களின் விடயம் தொடர்பில் USCIS செயற்பாடுகளையும் பூர்த்திசெய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். எந்தச் சூழ்நிலைகளின் கீழும், 2007 செப்றெம்பர் 30ம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர் DV -2007 நிகழ்ச்சிதிட்டத்திற்காக விசா இலக்கங்கள் எதுவும் கிடைக்காது

## 16. தெரிவு செய்யப்படாத விண்ணப்பகாரர்களுக்கு, அது பற்றி அறிவிக்கப்படுமா?

இல்லை. தெரிவுசெய்யப்படாத விண்ணப்பகாரருக்கு அவர்களின் பிரவேசம் பற்றி, எவ்வித தகவல்களும் தெரிவிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மாத்திரமே அது பற்றிய தகவல் அனுப்பப்படும். விண்ணப்பிக்கும் காலம் முடிந்ததிலிருந்து சுமார் 5 முதல் 7 மாதங்களுக்குள்ளாக அத்தகைய தகவல் கடிதங்கள் அனைத்தும், பிரவேசப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படும். அத்தகைய தகவல் எதுவும், தெரிவு செய்யப்படாதவருக்கு அனுப்பப்படுவதில்லை என்பதால் அத்தகையோர் பதிவுக்காலத்தின் முடிவிலிருந்து சுமார் 5 முதல் 7 மாதங்களுக்குள் கடிதமொன்றைப் பெறவில்லையாயின், தமது அவரின்/அவளின் விண்ணப்பம் தெரிவுசெய்யப்படவில்லை என்பதனைத் தாமாகவே விளங்கிக்கொள்ள வேண்டும்.

## 17. எத்தனை விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்படும்?

DV -2007 க்கு 50,000 DV விசாக்கள் கிடைக்கவுள்ளன. ஆனால் அந்த எண்ணிக்கையைவிடக் கூடுதலானோர் தெரிவுசெய்யப்படவுள்ளனர். உள்ள DV விசாக்கள் அனைத்தும் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக, கென்ற்றக்கி காவற்தூதர் நிலையம் 50,000 க்கும் கூடுதலான விண்ணப்பங்களைத் தெரிவுசெய்வதற்கான காரணம், முதலாவதாகத் தெரிவாகும் 50,000 பேரூமே விசா பெறத்தகுதி பெறமாட்டார்கள்; அல்லது விசா வழங்குவது தொடர்பில், தங்களின் விடயங்களை மேற்கொண்டும் தொடரமாட்டார்கள் என்பதனாலாகும். எனினும் ஆரம்பத்தில் தெரிவு செய்யப்படும் அத்தனைபேருக்கும் போதுமான எண்ணிக்கையான விசாக்கள் இருக்காதென்றும் இது பொருள்படும். தெரிவு செய்யப்படும் சகல விண்ணப்பகாரருக்கும், அந்நிரலில் அவர்களின் பெயர்கள் எத்தனையாவது இடங்களில் உள்ளன என்பது உடனுக்குடன் தெரியப்படுத்தப்படும். அவ்வாறு தெரிவுசெய்ய ப்பட்டோருக்கான நேர்முகப்பரீட்சைகள் 2006 ஓக்டோபர் முற்பகுதியில் ஆரம்பமாகும். கடல்கடந்த நாட்டு நிலையங்களில் ஐ.அ காவற்தூதரக அதிகாரிகளுடன் இடம்பெறுவதற்காக ஏற்பாடு செய்யப்படும். இந்த நேர்முகப்பரீட்சைகள் நடைபெறுவதற்கு, 4 முதல் 6 வாரங்களுக்கு முன்னதாக கென்ற்றக்கி காவற்தூதரகநிலையம், தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பகாரர்களுக்கு நியமனக்கடிதங்களை அனுப்பும். கையிருப்பிலுள்ள விசாக்களின் எண்ணிக்கையைப்பொறுத்து அந்தந்த மாதத்தில், விசா வழங்கப்படுவதற்குத் தயாராகவுள்ள விண்ணப்பக்காரர்களுக்கு ஒவ்வொரு மாதமும் உரிய விசாக்கள் வழங்கப்படும். 50,000 DV விசாக்கள் அனைத்தும் வழங்கப்பட்டு விடுவதுடன் அந்த ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டம் முற்றுப்பெற்றுவிடும். கோட்பாட்டளவில், 2007 செப்றெம்பருக்கு முன்னதாக விசா இலக்கங்களின் ஒதுக்கீடு முடிந்துவிடக் கூடும். **விசாக்கள் பெறவிரும்பும் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பகாரர்கள் தங்களின் விடயங்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும். கென்ற்றெக்கி காவற்தூதரக கணினி உங்களை தேர்ந்தெடுத்தால் நிச்சயமாக விசாவைப் பெறுவீர்கள் என்பது உறுதியில்லை.**

## 18. DV நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பிக்க மனுதாரருக்கு குறைந்த வயதுக்கட்டுப்பாடு ஏதும் உண்டா?

நிகழ்ச்சித்திட்டத்திற்கு மனுச்செய்ய, குறைந்த வயதெல்லை எதுவும் கிடையாது. ஆனால் விண்ணப்பிக்கும் சமயம் ஒவ்வொரு பிரதான மனுதாரருக்கும் அவசியம் இருக்கவேண்டிய உயர்பாடசாலைக்கல்வி அல்லது வேலை அனுபவம் போன்ற தேவைகள், 18 வயதுக்குட்பட்ட அநேகரை வலுவுடையதான விதத்தில் தகைமையற்றவர்களாக்கிவிடும்.

## 19. DV நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஏதாவது கட்டணங்கள் உண்டா?

**ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு எந்தவித கட்டணமும் கிடையாது.** இவ்வாண்டு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் ஓர் ஐ.அ காவற்தூதரக பிரிவினால் விண்ணப்பங்கள் உண்மையாகவே தெரிவுசெய்யப்பட்டு மேல் நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படும் கட்டத்திலேயே உரிய ஆட்கள், பின்னொருசமயம், ஒரு விசேட DV பரிசீலனைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியிருக்கும். DV விண்ணப்பகாரர்கள் குடிவரவு விசாக்களுக்கு விண்ணப்பிக்கும் ஏனையோரைப்போன்று விசாவுக்கு மனுசெய்யும்போது வழக்கமான விசாக்கட்டணத்தையும் செலுத்த வேண்டியிருக்கும் கட்டணங்கள் பற்றிய விபரங்கள், தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பகாரர்களுக்கு கென்றெற்றக்கி காவற்தூதர் நிலையத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும் அறிவுரைகளோடு சேர்க்கப்பட்டு இருக்கும்.

## 20. விசா பெறுவதைத் தகுதியற்றதாக்கும் எந்த ஒரு காரணியிலிருந்தும் விலக்குப்பெறுவதற்கு விண்ணப்பிக்க, DV மனுதாரர்கள் விசேட அருகதையொன்றைக் கொண்டுள்ளனரா?

இல்லை. குடிவரவு மற்றும் தேசியசட்டத்தில் குறித்துவைக்கப்பட்டுள்ளபடி, விண்ணப்பகாரர்கள் குடிவரவு விசாக்கள் பெற தகுதியற்றதாக்கும் சகல காரணிகளுக்கும் உட்பட்டேயிருப்பார்.

## 21. மற்றொரு பிரிவின் கீழ், ஒரு குடிவரவு விசாவுக்கு ஏற்கனவே மனுச்செய்து பதியப்பட்டுள்ள ஆட்கள், இந்த DV நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியுமா?

ஆம். அத்தகையோர் இந்த DV நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

## 22. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர்கள் DV வகுதியின் கீழ் விசாக்களுக்கு விண்ணப்பிக்க எவ்வளவு காலத்திற்கு உரித்துடையவராக இருக்கமுடியும்?

DV -2007 லொத்தர் மூலம் தெரிவு செய்யப்பட்டோர் 2007 நிதி ஆண்டின்போது மட்டுமே விசாவுக்கு விண்ணப்பிக்க உரித்துடையோராவர். அதாவது, 2006 ஒக்டோபர் முதல் 2007 செப்றெம்பர் முடியும்வரை. விண்ணப்பகாரர் நிதியாண்டின் இறுதி வாக்கில் (2007 செப்றெம்பர் 30)DV விசாவைப் பெற்றுவிடவேண்டும் அல்லது அந்தஸ்து நிலையைச் சீர்செய்து கொள்ள வேண்டும்.தெரிவு செய்யப்பட்டு ஆனால், நிதியாண்டு 2007 இன் போது விசா பெறாதவர்களாக உள்ள அனைவர்க்கு DV நன்மைகளை, அடுத்துவரும் ஆண்டிற்குத் தொடர்ந்து கொண்டு செல்ல முடியாது. மேலும் DV 2007 பதிவின் மூலம் அந்தஸ்து பெறும் வாழ்க்கைத்துணைகள் பிள்ளைகள், 2006 ஒக்டோபருக்கும் 2007 செட்றெம்பருக்குமிடையே மாத்திரம்தான் DV பகுதியின் கீழ் விசாக்களைப் பெற்றுக்கொள்ள முடியும். கடல்கடந்த நாடுகளிலிருந்து விண்ணப்பிப்போர் ஒழுங்குசெய்யப்பட்ட சந்திப்பிற்கு நான்கு முதல் ஆறு வாரங்களுக்கு முன்னதாக, கென்றக்கி காவற்தூதர் நிலையத்திலிருந்து ஒரு நியமனக் கடிதத்தைப் பெறுவர்.

## 23. எப்போது E-DV தொடரறா வசதி கிடைக்கும்?

2005 ஒக்டோபர் 5 EST நண்பகல் 12 மணி (GMT -05) முதல் 2005 டிசம்பர் 4 EST நன்பகல் 12 மணிக்கு (GMT -5) வரை, இந்த இடையறாத்தொடர்பு வசதி கிடைக்கும்.

## 24. E-DV பிரவேசப் பத்திரத்தை இறக்கம் செய்து Microsoft சொல் செய்நிரலுக்கு அல்லது வேறு பொருத்தமான செய்தி நிரலுக்கு மாற்றிப்பாதுகாத்து அதன் பின்னர் அதனைப் பூர்த்திசெய்வதற்கு எனக்கு வாய்ப்பிருக்குமோ?

இல்லை.அப்பத்திரத்தைப் பூர்த்திசெய்து சமர்ப்பிப்பதற்காக மற்றொரு செய்திநிரலுக்கு மாற்றி பாதுகாப்பதற்கு உங்களால் முடியாதிருக்கும். E-DV பிரவேசபத்திரம் வெறும் வலைப்பத்திரமே. தனியுரிமைபெற்ற சொல் செய்நிரல் வடிவமைப்பைவிட இது அதனை, அதிகளவில் “உலகளாவியதாக” ஆக்குகிறது என்ற காரணத்தால், அத்தோடு அது இந்த தகவலைத் தொடரறா நிலையிலேயே பூர்த்திசெய்து சமர்பிக்கப்படுவதை அவசியமாக்கிறது.

**25. ஒரு வருடியை எட்டுவதற்கு எனக்கு வசதிவாய்ப்பில்லை என்ற நிலையில், வருடுவதற்கென நிழற்படங்களை அமெரிக்காவிலுள்ள எனது உறவினர்களுக்கு அனுப்பி, அப்படங்களை ஒரு செருகுவட்டில் பாதுகாத்து, அதன்பின்னர் விண்ணப்பிப்பதற்கு ஏதுவாக, செருகுவட்டை எனக்குத்திரும்ப அஞ்சல் செய்யக் கூடியதாக இருக்குமா?**

ஆம். அறிவுறுத்தல்களில் இடம்பெற்றுள்ளபடி நிழற்படத்தேவைகளை, அந்நிழற்படங்கள் பூர்த்திசெய்வதோடு, மற்றும் E-DV ,தொடறாருநிலையில் நிழற்படம் மின்னணுசார் முறையில் அமைந்ததானவிதத்தில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுவதாயின், இதனைச்செய்ய முடியும். பிரவேசப்பத்திரம் இடையறா நிலையில் சமர்ப்பிக்கப்படும்போது, விண்ணப்பகாரர் வருடப்பட்ட நிழற்படக்கோப்பினை ஏற்கனவே கைவசம் வைத்திருக்க வேண்டும். இடையறா நிலைப்பிரயோகத்திற்கு வேறாக, நிழற்படங்களைச் சமாப்பிக்க முடியாது. ஒருவரினால் அல்லது ஒவ்வொரு ஆளுக்குமாக ஒவ்வொரு இடையறாநிலை விண்ணப்பம் மட்டுமே சமர்ப்பிக்க முடியும். பல் பிரதேசங்கள் DV - 2007 திட்டத்திலிருந்து, அந்த ஆளுக்கான பிரவேசத்தை இரத்துச்செய்துவிடும். முழுமையான விண்ணப்பத்தை (நிழற்படமும் விண்ணப்பமும் சேர்ந்ததாக ஐ.அ விலிருந்து மின்னணுசார் முறையில் சமர்ப்பிக்க முடியும்.

**26. ஒரு பகுதியை நிரப்பிப், பின்னர் எஞ்சியதை நிரப்புவதற்கு வாய்ப்பாக, இடையரு நிலையில் நான் அந்தப்படிவத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமா?**

இல்லை. இதனைச்செய்ய முடியாது. E-DV பிரவேசப்பத்திரம், ஒரே சமயத்தில் பூர்த்திசெய்யப்பட்டுச் சமர்ப்பிக்கப்படும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. எனினும், படிவம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளதாலும், வலையமைப்பில் தடங்கல்கள், தாமதங்கள் ஏற்படக் கூடுமாதலாலும், படிவத்தின் இறக்கத்திற்கும் E-DV இணைய தளத்தில் அது கிடைக்கப்பெறுவதற்கும் இடையே, அறுபது (60) நிமிடங்கள்வரை அவகாசம் உள்ள விதத்தில் E-DV முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது. கையாள்வதற்கென அறுபது நிமிடங்களுக்குக் கூடுதலான காலங்கடந்ததும், அந்தப்பிரவேசப்பத்திரம் மின்னணுசார் முறையில் கிடைக்கப்பெறாதவிடத்து, அதுவரை கிடைக்கப்பெற்ற தகவல், நிராகரிக்கப்பட்டுவிடும். ஒரு முழுமையான பிரவேசப்பத்திரத்தை முன்னைய, ஒரு பகுதி அளவிலான பத்திரத்தின் இரட்டைப்பிரதி எனத்தற்செயலாகப் பொருள்கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தைத் தவிர்ப்பதற்காகவே இது செய்யப்படுகிறது. உதாரணத்திற்கு, மனைவி, பிள்ளையை உடைய ஒரு விண்ணப்பதாரர், பூர்த்திசெய்யப்பட்ட E-DV பிரவேசப்பத்திரத்தின் முதலாம் பகுதியை அனுப்புகிறார் என்று வைத்துக்கொள்வோம். அதன் பிறகு படிவத்தின் இரண்டாம் பகுதி கிடைக்கிறது. ஆனால், பிள்ளையின் படத்தைக்கொண்ட கோப்பைத் தேடிக்கண்டுபிடிப்பதில் குழப்பநிலை தோன்றியதால் இரண்டாம் பகுதியை அனுப்புவதற்குத் தாமதமாகிவிடுகிறது. பூர்த்தி செய்யப்பட்ட அப்பத்திரத்தின் இரண்டாம் பகுதியை விண்ணப்பதாரர் அனுப்பி, E-DV இணையதளம் அதனை அறுபது (60) நிமிடகால அவகாசத்துக்குள் பெற்றுவிட்டால் பிரச்சனை எதுவுமில்லை. ஆனால், படிவத்தின் இரண்டாம் பகுதி அறுபது (60) நிமிடங்களுக்குப் பின்னர் கிடைக்கின் அதனை மீண்டும் முழுமையாகச் சமர்ப்பிக்கத் தொடங்குமாறு, விண்ணப்பகாரருக்குத் தெரிவிக்கப்படும். DV -2007 க்கான அறிவுறுத்தல்கள் அப்படிவத்தை நிரப்புவதற்கு என்னென்ன தகவல்கள் திரட்டப்படவேண்டும் என்பதைத் தெளிவாகவும் பூரணமாகவும் விளக்குகின்றன. இந்தவகையில் இடையறாநிலையில் படிவத்தைப் பூர்த்தி செய்யத் தொடங்குவதற்கு முன்னதாக, அவசியமான தகவல் அனைத்தையும் நீங்கள் கொண்டிருக்கிறீர்கள் என்பதை உறுதி செய்யும் விதத்தில் நீங்கள் பூரண ஆயத்தமாக இருப்பீர்கள்

**27. சமர்ப்பிக்கப்பட்ட இலக்கமுறைப்படிவமங்கள், குறித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு அமைவாக இல்லையெனின், இயக்கமுறைமை, E-DV பிரவேசப்படிவத்தைத் தன்னியக்கரீதியில் நிராகரித்து அதனை அனுப்பியவருக்கு அத்தகவலைத்தெரிவிக்குமென செயல்முறைகள் எடுத்துரைக்கின்றன. நான் எனது பிரவேசப் படிவத்தை மீண்டும் சமர்ப்பிக்க முடியும் என, இது கருதப்படுமா?**

ஆம். விண்ணப்பத்தை மீண்டும் சமர்ப்பிக்க முடியும். பிரவேசப்பத்திரம் தானாகவே நிராகரிக்கப்பட்டுவிட்டதால் E -DV இணையதளத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டதாக உண்மையில் அதனைக் கருத முடியாது. அது, E-DV க்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு பிரவேசப் பத்திரமாகக் கணிக்கப்படமாட்டாது. ஆகவே, கிடைத்ததை உறுதிப்படுத்தும் அறிவித்தல் எதுவும் அனுப்பப்படுவதில்லை. தேவைகளுக்கு அமைவாகவில்லை என்பதால் அனுப்பப்பட்ட இலக்கமுறை நிழற்படங்கள் தொடர்பில் ஏதாவது பிரச்சினைகள் இருப்பின், E-DV வலையமைப்பினால் அவைதானாகவே நிராகரிக்கப்பட்டுவிட்டன என்பதே அர்த்தம். எனினும், இணையத்தின் இயற்தன்மை காரணமாக நிராகரிப்பு தொடர்பிலான தகவல், அனுப்பியவரைச் சென்றடைவதற்கு எடுக்கும் நேரம், எதிர்வு கூறப்படமுடியாததாகும். விண்ணப்பகாரரே பிரச்சனைகளை அறிந்துணர்ந்து படிவத்தின் முதற்பாகம் அல்லது இரண்டாம் பாகத்தை, அறுபது (60) நிமிடங்களுக்குள் மீண்டும் அனுப்பினால், பிரச்சனை எதுவும் இருக்காது, இல்லாவிடில் சமர்ப்பிக்கும் நடைமுறையைத் திரும்பவும் ஆரம்பிக்க வேண்டியிருக்கும். விண்ணப்பகாரர் ஒருவர் அவசிய மேற்படின், பூரணமான ஒரு விண்ணப்பம் கிடைக்கப்பெற்று அது கிடைத்ததை உறுதிப்படுததும் அறிவித்தல் அனுப்பப்படும் வரை எத்தனை தடவைகளும் அதனைச் சமர்ப்பிக்க முயலலாம்.

## 28. பூர்த்திசெய்யப்பட்ட அந்த E -DV மனு, இடையறாத் தொடர்பு மூலம் கிடைக்கப் பெற்றுவிட்டதான மின்னனுசார் உறுதிப்பாட்டு அறிவித்தல், அது சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து உடனேயே அனுப்பப்படுமா?

ஏற்றுக்கொள்ளத்தக்கதான ஓர் E -DV பிரவேசப்பத்திரம் கிடைக்கப்பெற்றதை உறுதிப்படுத்தும் தகவலைக்கொண்டிருக்கும் E -DV வலைக்கடப்பிடம், தனது பிரதிபலிப்பை உடன் தெரிவித்துவிடும். ஆனால் இணையத்தின் இயற்தன்மை காரணமாக அது அனுப்பியவரைச் சென்றடைய எவ்வளவு நேரம் எடுக்கும் என்பது எதிர்வு கூற முடியாதது "Submit" பொத்தானை அழுத்தியபின், பல நிமிடங்கள் கழிந்திருப்பின், அந்தப்பொத்தானை இரண்டாவது தடவை அழுத்துவதால் பாதகமில்லை. உறுதிப்படுத்துவதற்கான பிரதிபலிப்பு கிடைக்கப்பெறாததால், அப்பொத்தானை இரண்டாவது தடவை அழுத்தும் ஒரு நிலைமையால், E-DV முறைமை குழப்பமடைந்துவிடமாட்டாது. அவசியமாயின், முழுமையான ஒரு விண்ணப்பம் கிடைக்கப்பெற்று அதனை உறுதிசெய்யும் அறிவித்தல் அனுப்பப்படும்வரை, ஒரு விண்ணப்பகாரர் ஒரு விண்ணப்பத்தை எத்தனை தடவை வேண்டுமானாலும் சமர்ப்பிக்க முயலலாம்.

## பிரதேச ரீதியாக தமது சுதேசிகள் தகைமைபெறும் நாடுகளின் நிரல் வருமாறு

கீழேயுள்ள நிரல்கள் ஒவ்வொரு பூகோளப் பிரதேசத்திலும் பல்வகை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தகுதிபெறும் சுதேசிகளைக் கொண்ட நாடுகளைக் கோடிகாட்டுகின்றன. ஒவ்வொரு பிரதேசத்திற்குள்ளும் உரிய நாடுகளைத் தீர்மானிப்பது வெளிவிவகாரத் திணைக்களத்தின் புவியியலாளர் வழங்கிய தகவலை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்பட்டதாகும். DV -2007 நிகழ்ச்சித்திட்டத்தில் இடம்பெறத் தகுதி பெறாத சுதேசிகளைக் கொண்ட நாடுகள், குடிவரவு - தேசியம் சட்டத்தின் பிரிவு 203(C) யிலுள்ள சூத்திரத்திற்கியைய ஐ.அ. பிரஜா உரிமை மற்றும் குடிவரவு சேவைகள் பிரிவினால் (USCIS) இனங்காணப்பட்டவையாகும். கடல்கடந்த நாடுகளைப்பொறுத்தவரை, தங்கியிருக்கும் பகுதிகள் அவற்றை ஆளும் நாடுகள் இடம்பெறும் பிரதேசத்திற்குள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த பல்வகை நிகழ்ச்சித்திட்டத்தில் இடம்பெறத் தகுதிபெறாத சுதேசிகளைக் கொண்டுள்ள நாடுகள் குடும்ப அநுசரணையுடன் கூடிய, மற்றும் தொழில் வாய்ப்பினை அடிப்படையாகக் கொண்ட அல்லது "உயர் அனுமதி" நாடுகள் என்ற வகையில் அவை பிரதான மூல நாடுகள் என்பதால், அந்தந்தப் பிரதேச நிரல்களின் கீழே குறிக்கப்பட்டுள்ளன.

### ஆபிரிக்கா

| | | |
|---|---|---|
| அல்ஜீரியா | லிபியா | அங்கோலா |
| மடகஸ்கார் | பெனின் | மலாவி |
| பொட்ஸ்வானா | மாலி | பர்கினா பாஸோ |
| மோரிற்றேயா | புருண்டி | மொரிஷியஸ் |
| கேமரூன் | மொராக்கோ | கேப் வெர்டே |

| | | |
|---|---|---|
| மொசாம்பிக் | நமிபியா | சாட் |
| மத்திய ஆபிரிக்கக் குடியரசு | கொமரோஸ் | நைஜீரியா |
| நைகர் | கொங்கோ | ரூவாண்டா |
| கொங்கோ ஜனநாயக குடியரசு | செனகல் | ஜிபூட்டி |
| சயயோ டொமி மற்றும் பிரின்சிப் | செசெல்ஸ் | சோமாலியா |
| ஐவரிகோஸ்ற்றின்(Ivory coast) | எகிப்து | சியராலியோன் |
| ஈகுயறொற்றியல் கினி | ஏரித்ரியா | தென்ஆபிரிக்கா |
| இத்தியோப்பியா | சூடான் | காபோன் |
| சுவைசிலாண்ட் | காம்பியா | தன்சானியா |
| கானா | டோகோ | கினீ |
| துனீசியா | கனீயா -பிஸோவு | உகாண்டா |
| கென்யா | ஸம்பியா | ஸிம்பாப்வே |
| லோசெத்தோ | லைபிரியா | |

## ஆசியா

| | | |
|---|---|---|
| ஆப்கானிஸ்தான் | லெபனன் | லாவோஸ் |
| பஹ்ரெய்ன் | மலேஷியா | யேமன் |
| பங்காளதேஷ் | மாலைதீவு | குவைத் |
| பூட்டான் | மொங்கோலியா | ஐக்கிய அரபு எமிரேட்ஸ் |
| புறூணை | நேபாளம் | ஜோர்தான் |
| பர்மா | வடகொரியா | தாய்லாந்து |
| கம்போடியா | ஓமான் | ஜப்பான் |
| கிழக்கு தீமூர் | கட்டார் | தாய்வான் |
| ஹொங்கொங் விசேட நிர்வாக பிரிவு | சவூதி அரேபியா | இஸ்ரயல் |
| இந்தோனேஷியா | சிங்கப்பூர் | சிரியா |
| ஈரான் | இலங்கை | ஈராக் |

பின்வரும் ஆசிய நாடுகளின் சுதேசிகள் இவ்வாண்டுக்கான குடியேற்ற பல்வகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளத் தகுதிபெறவில்லை.

சினா(கண்டத்தில் பிறந்த),இந்தியா, பாகிஸ்தான்,தென்கொரியா, பிலிப்பைன்ஸ், மற்றும் வியட்நாம் ஹொங்கொங் SAR மற்றும் தாய்வானும் நிகழ்ச்சிதிட்டத்தில் சேர்க்கப்பட்டதாகக் காட்டப்பட்டுள்ளன. மக்கவ் SAR ரும் இம்முறை சேர்க்கப்பட்டதாகக் கீழே காட்டப்பட்டுள்ளது

## ஐரோப்பா

| | | |
|---|---|---|
| அல்பேனியா | லிதுதாவேனியா | பெல்ஜியம் |
| அன்டோரா | லக்ஸம்பேர் | பல்கேரியா |
| ஆர்மீனியா | மோல்டா | குரோஷயா |
| அவுஸ்திரியா | மொல்டோவா | நோர்வே |
| மக்கோ விசேட நிர்வாகப்பிரிவு | மொனாக்கோ | போலந்து |
| பெலாரூஸ் | வடஅயர்லாந்து | செக்குடியரசு |
| போஸ்னியாவும்ஹெட்ஸோகோவினா | சைப்ரஸ் | ருமேனியா |
| சோலவக்கியா | சென்மரினோ | அஜர்பைஜான் |

மக்டொனியா (முன்னய யூகோஸ்லாவியா குடியரசு)
நெதர்லாந்து (கூறுகளும் கடல்கடந்தனவாகத் தங்கியுள்ள பகுதிகளும்)
போர்ச்சுகல் (கூறுகளும் கடல்கடந்தனவாகத் தங்கியுள்ள பகுதிகளும்)
டென்மார்க் (கூறுகளும் கடல்கடந்தனவாகத் தங்கியுள்ள பகுதிகளும்)
பிரான்ஸ்( (கூறுகளும் கடல்கடந்தனவாகத் தங்கியுள்ள பகுதிகளும்)

| | | |
|---|---|---|
| சேபியாவும் மொன்நீக்குரொவும் | பின்லாந்து | ஜியோர்ஜியா |
| துருக்கிமெனிஸ்தான் | சுலோவாக்கியா | ஸ்பெயின் |
| ஜேர்மனி | உக்ரெய்ன் | உஸ்பெகிஸ்தான் |
| கிரேக்கம் | சுவீடன் | வத்திகான் நகர் |
| ஹங்கேரி | சுவிற்சர்லாந்து | லீஸ்றடெய்றன் |
| ஐஸ்லாந்து | தனிகிஸ்தான் | லட்வியா |
| அயர்லாந்து | துருக்கி | கிரகிஸ்தான் |
| இத்தாலி | கசகத்தான் | எஸ்டோனியா |

பின்வரும் ஐரோப்பிய நாடுகள் இவ்வாண்டுக்கான பல்வகை நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளத் தகுதிபெறவில்லை. பெரிய பிரித்தானியா,போலந்து, ரஷ்யா. பெரிய பிரித்தானியா(ஐக்கிய இராச்சியம்) பின்வரும் தங்கியுள்ள பகுதிகளை உள்ளடக்குகின்றன: அங்கிலா, பேர்முடா,பிரிட்டிஷ்வேர்தீவுகள், ஹேமன் தீவுகள், போக்லாண்ட் தீவுகள்,ஜிப்ராட்லர்,மொன்ஸ்ராட், பிற்ஷயன், சென்ஹெலனா,றஜேக்ஸ் கைகோஸ் தீவுகள்.

குறிப்பு: DV நிகழ்ச்சிக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக வடஅயலாந்து வேறாகப் காட்டப்பட்டுள்ளது. தகுதிபெறாததாக, தகுதிபெறும் நாடுகளிடையே நிரல்படுத்தப்பட்டுள்ளதைக் கவனிக்க

## வடஅமரிக்கா

பஹாமாஸ்

வட அமெரிக்காவில், கனடா மெஸ்சிக்கோ சுதேசிகள் இவ்வாண்டுக்கான பல்வகை நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

## ஓஷியானா - பசுபிக்கையும் அடுத்துள்ள கடல்களையும் சேர்ந்த தீவுகள்

அவுஸ்திரேலியா (கூறுகளும் கடல்கடந்தனவாகத் தங்கியுள்ள பகுதிகளும்)
நியூஸ்லாந்து (கூறுகளும் கடல்கடந்தனவாகத் தங்கியுள்ள பகுதிகளும்)
மைக்ரொனேசியா (நௌறு சமஷ்டி அரசுகள்)

| | | |
|---|---|---|
| ரூமேனியா | பப்புவா நீயூகினி | மார்ஷல் தீவுகள் |
| கிரிபத்தி | சொலமன் தீவுகள் | டோங்கா |
| டுவாலோ | சமோ | பலாயு |
| பிஜி | வனாட்டு | |

## தென்அமரிக்கா, மத்திய அமரிக்கா, கபீரியன்

| | | |
|---|---|---|
| அன்ரிகுவா அன் பார்புடா | கயனா | கொண்டூரஸ் |
| ஆஜன்ரினா | பாபடோஸ் | நிக்கரகுவா |
| பேலிஸ் | பனாமா | பரகுவே |
| பொலிவியா | பேரு | பிரேசில் |
| சிலி | சென்ற் அன் நெவிஸ் | சென்லூசியா |
| தொஸ்டோரிக்கா | | கியூபா |
| ரினிடட் அன் டொபாக்கோ | டோமினிகா | சுரினேம் |
| ஈக்குவாடோர் | கிரேனேடா | குவாட்டமாலா |
| வெனிசுலா | | உருகுவே |
| சென்ற்வின்சன்ற் மற்றும் கிரேஷடீன்ஸ் | | |

இப்பிரதேசத்தில் பின்வரும் நாடுகள் இவ்வாண்டுக்கான நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை: கொலம்பியா, டொமினிஜன் குடியரசு, எல்சவடோார், கெய்ற்றி, ஜமயக்கா மற்றும் மெக்ஸிகோ.